ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,052—1962 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා—1962.4.27

13,052 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் | — | விலைக்கட்டளைகள் | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் | 238 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 237 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

இல. இடி/கிபி/735/1/6.

### 1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இல. நிதிச்சட்டம்

சொல்லப்பட்ட சட்டத்தின் 8 (ஜே) பிரிவின் கீழ் பதவி நீங்கஞ் செய்துள்ளவரான திரு. எஸ். எஸ். பெரேனுந்தோ அவர்களுக்குப் பதிலாக, 1962 மார்ச்சு 30 ஆந் தேதி தொடக்கம் இலங்கை வங்கி அதிபர் ஒருவராக கைத்தொழில் உண்ணட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளரான திரு. வி. எல். வீரசிங்கா எம். பி. இ. அவர்களை 1961 ஆம் ஆண்டு 65 ஆம் இல. நிதிச் சட்டத்தின் 8 (டி) ஏற்பாடுகளின் கீழும் 8 (ஜி) ஏற்பாடுகளுக்கமைவாகவும் நிதியமைச்சர் நியமித்துள்ளார்.

எச். ஜினதாச,
நிதியமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளர்.

கொழும்பு,
1962, ஏப்பிறில் 18 ந் தேதி.
4—715

---

### சம்பளச்சபைச் சட்டம்

#### அறிவித்தல்

மெத்தைத் தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எஸ். ஜி. எச். ஷொக்மன் தாமாக விலகியதால், அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. எஸ். ஏ. சூரசேன என்பவரை, (136–ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 9–ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசீயமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943–ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26–ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சா. ப. குமாரசிங்க,
தொழில், தேசீயமய சேவை மந்திரி காரியாலய
பதில் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962–ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 16 ந் தேதி.
4—717

### சம்பளச்சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136–ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9–ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசீயமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943–ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26–ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எம். முத்துக் கிருஷ்ண சம்பளச் சபைச் சட்டத்தின் 12 (2)–ம் பிரிவின் பிரகாரம் குறித்த சபையினின்றும் தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப் பதிலாக திரு. ஒ. ஏ. இம்மானுவல் என்பவர் ;

(2) உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த டக்டர் டபிள்யு. ஒ. த சில்வா, சம்பளச் சபைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் பிரகாரம் குறித்த சபையினின்றும் தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப்பதிலாக திரு. ஜீ. இலங்கா பெரேரா என்பவர்.

சா. ப. குமாரசிங்க,
தொழில், தேசீயமய சேவை மந்திரி காரியாலய
பதில் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962–ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 11 ந் தேதி.
4—642

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

## விவசாயப் பொருட்கள் (கட்டுப்பாடு) சபை

விவசாயப்பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 161) பிரிவு 3 (1) இன் பிரகாரம் விவசாயப் பொருட்கள் (கட்டுப்பாட்டு) சபைக்கு 1962 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ந் திகதி தொடக்கம் 3 வருட காலத்திற்கு உறுப்பினர்களாக கீழே சொல்லப்பட்டவர்களை, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர் நியமித்திருக்கிறார் என்பதை இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகிறது:

(1) கமத்தொழில்சேவை அதிபர்,

(2) கூட்டுறவு விருத்தி அதிகாரியும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்,

(3) கமத்தொழில் அதிபர்,

(4) உணவு அதிகாரி,

(5) கௌரவ செயலாளர், தேசியவர்த்தகச் சபை.

கே. ஆழ்வாப்பிள்ளை,
நிரந்தரச் செயலாளர்,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ந் திகதி.

4–755

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## விளம்பரம்

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்று நோய்கள் " (விலங்குகள்) பிரமாணத் திருந்தச்சட்டம் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உபபிரிவு (1) ன் விதிகளுக்கமைய 16.3.62 ல் வெளியான 12,986 இலக்க வர்த்தமானியில், கரைச்சி–துணுக்காய்ப் பிரிவு பரந்தன் கிராமத்தில் இருந்ததாகப் பிரகடனப்படுத்தப்பட்ட " அடைப்பான் " என்னும் தொற்று நோய் அங்கு தற்பொழுது அற்றுவிட்டதென்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பிரகடனம் ஈண்டுப் பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்குவரும்.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருக வைத்தியர்.

அரச பிரதம மிருக வைத்தியர் களரி,
பேராதனை, 21.4.62.

4–765/1

## அறிவித்தல்

17.2.61 ன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபடி 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச்சட்டத்தின் உட்பிரிவு 4, உபபிரிவு 1 (அத்தியாயம் 327) ன் விதிகளுக்கமைய " தொற்று நோய்ப்பிரதேசம் " எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில், வட மாகாணம் யாழ்மாவட்டத்தில் கரைச்சி–துணுக்காய்க் காரியாதிகாரியின் பிரிவைச் சேர்ந்த கிளிநொச்சி (5 ம் வாய்க்கால்) பகுதி " அடைப்பான் " நோயிலிருந்து விடுபட்டுள்ளதால் இப்பகுதி " தொற்று நோய்ப் பிரதேசமல்ல " என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இப்பிரகடனம் ஈண்டுப் பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல் முறைக்கு வந்துள்ளது.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருக வைத்தியர்.

அரச பிரதம மிருக வைத்தியர் களரி,
பேராதனை, 1962.4.21.

4–765/2

## வன சீவராசிப் பகுதி

### வேட்டையாடுதல் தவிர் காலம்—1962

இலங்கையில் வருடாந்தம் ஏப்ரல் மாதம் 30 ம் திகதி தொடக்கம் அக்டோபர் மாதம் 31 ம் திகதி வரைக்கும் வன ஜந்துக்களை வேட்டையாடக் கூடாத தவிர் காலம் என்பதை இத்தால் யாவரும் அறிந்து கொள்ளும் பொருட்டாக விளம்பரம் செய்யப்படுகிறது.

கீழே சொல்லப்பட்ட வன ஜந்துக்கள் தவிர் காலத்தில் பாதுகாக்கப்படுவன என்றும் இவற்றை வேட்டையாடி அழித்தல் தாவர வன ஜந்து பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தடைக்குரிய குற்றம் என்றும் இத்தால் அறியப்படுத்தப்படுகின்றது.

பறவைகள் : மயில், இலங்கை முள்ளுக் கோழி, நரைநிறக் கௌதாரி, வன்னக் கவுதாரி, காட்டுக்கோழி, காட்டுக் காடை, கோட்டான், எல்லா வகை உள்ளங் குருவிகள், சீழ்கையிடும் காட்டு வாத்து, ராஜா வாத்து.

மிருகங்கள் : மரை, புள்ளிமான், புளுட்டைமான் அல்லது சருகுமான்.

நடுத்தர மண்டலங்களினுள் எவ்வகை காட்டுப் பிராணியையும் சுடவோ கொல்லவோ அல்லது பிடித்துச் செல்லவோ உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

ஏ. எஸ். ஏ. பகீர்,
பதில் பாலகர்.

வன சீவராசிப் பகுதி,
கொழும்பு, 16.4.62.

4—689.

## முக்கிய விளம்பரம்

*1962 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 1 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1962 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 4 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு சித்திரை (ஏப்பிறில்) மாதம் 23 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1962 ம் ஆண்டு சித்திரை (ஏப்பிறில்) மீ 27 ந் உ.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.